# 09 ஆண்டவர் இயேசு நம்மோடு இருக்கிறார்


**இரத்தினபுரியில் வெள்ளப்பெருக்கு**

**சீனாவில் பூகம்பம்**

**யுத்தநடவடிக்கையால் பல மக்கள் இடப்பெயர்வு**

**பொதுமக்கள் மீது வான்தாக்குதல்**

**இலங்கையில் சுனாமி பேரலை சேதம் தேசிய அளவில் புனரமைக்க 164 மில்லியன் தேவை**







மேற்கூறப்பட்ட செய்திகளை நீங்கள் பத்திரிகையில் வாசித்து இருப்பீர்கள். இவை உங்கள் மனதில் துயரத்தை ஏற்படுத்தியிருக்கும்.

ஆண்டவர் இயேசு இவ்வுலகத்தை அழகாகப் படைத்தார். அதில் நிறைவும் திருப்தியும் அடைந்தார். பல இயற்கை வளங்களை நமது பயனுக்காகத் தந்தார். மனிதர் இவ் வளங்களைத் தகாத முறையில் பயன்படுத்துவது அழிவுகளை அதிகரிக்கும் வெள்ளப்பெருக்கு, நிலநடுக்கம், ஆழிப்பேரலை, மண்சரிவு போன்ற இயற்கை அழிவுகளும், மற்றும் போர், வறுமை, பஞ்சம், பட்டினிச்சாவு, செயற்கை அழிவுகளை உலகம் எதிர்நோக்குகின்றது. அனர்த்தங்களால் பல மனித உயிர்கள் பலியாகின்றன, கட்டிடங்கள் சேதமடைகின்றன, இவ்வாறான பெறுமதி வாய்ந்த உடைமைகள் இழக்கப்படுகின்றன. இன்னும் பலர் அகதிளாக்கப்பட்டு உள நெருக்கீடுகளுக்கு உள்ளாகின்றனர்.

## உங்களுக்குத் தெரியுமா?


*தாய்லாந்தின் பூக்கெற் தீவின் மைக்கோ கடற்கரையில் பல நூற்றுக்கணக்கான மக்களை ஆழிப்பேரலையிலிருந்து பிரித்தானியா நாட்டு பத்து வயது நிரம்பிய **தில்லி (Tilly)** காப்பாற்றினாள். கடவுள் இவளை ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளார்.*

*அதிர்வுகள், நிலநடுக்கங்கள், ஒலி அலைகள் என்பவற்றை உணரும் சக்தி விலங்குகளுக்கு உண்டு. மனிதக் காதுகளுக்கு உணர முடியாத குறைந்த மீடிறன் உடைய ஒலிகளை யானைகள் கேட்க வல்லவை என்பதால் பல கிலோமீற்றருக்கு அப்பால் கூட குறைந்த அதிர்வெண் அலைகளை யானைகள் உணர்ந்து விடும்.*

**வாசிப்போம்**
*லூக்கா 13:1-5*

ஒரு சமயம் சிலர் இயேசுவிடம் வந்து, பலி செலுத்திக் கொண்டிருந்த கலிலேயரை பிலாத்து கொன்றுவிட்டார் என்ற செய்தியை அறிவித்தனர். அப்பொழுது இயேசு, ''கொல்லப்பட்ட கலிலேயர் மற்ற கலிலேயரை விட பாவிகள் என நினைக்கிறீர்களா அப்படியல்ல'' என்றும் கூறினார். தொடர்ந்து சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேர் கொல்லப்பட்டனர். இவ்வாறு இறந்தவர்கள் எருசலேமில் குடியிருந்தவர்களை விட பாவிகள் என நினைக்கின்றீர்களா? அப்படியல்ல எனக் கூறினார்.

## பிறவிக் குருடன் குணமாகல்



சில அழிவுகள் மனிதனுடைய பாவச் செயல்களால் ஏற்படவில்லை என்பதை ஆண்டவர் இயேசு தமது செயலால் காட்டினார். பிறவியிலேயே பார்வையற்ற ஒருவரை சீடர்கள் கண்டு, “ரபீ இவ்வாறு பார்வையற்றுப் பிறக்கக் காரணம், இவர் செய்த பாவமா அல்லது இவரது பெற்றோர் செய்த பாவமா” என வினவ, இயேசு, “இவர் செய்த பாவமும் அல்ல; இவர் பெற்றோர் செய்த பாவமும் அல்ல, கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும் பொருட்டே இப்படிப் பிறந்தார் எனக் கூறி, தரையில் உமிழ்ந்து, உமிழ் நீரால் சேறு உண்டாக்கி பார்வையற்றோனுடைய கண்களில் பூசி, “நீ சீலோவாம் குளத்திற்குப் போய், கண்களைக் கழுவு” என்றார். சீலோவாம் என்பதற்கு “அனுப்பட்டவர்” என்று



இலவச விநியோகத்திற்காக

பொருளாகும். அவன் சீலோவாம் குளத்தில் கழுவி பார்வை பெற்று இயேசுவை மகிமைப்படுத்தினான் என யோவான் 9:1-41ல் காண்கிறோம். கடவுள் அன்பும் இரக்கமும் நிறைந்தவர். அவர் ஒருபோதும் நாம் செய்யும் பாவங்களுக்காக அழிவுகளை ஏற்படுத்த மாட்டார். நாம் பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு கோரும்போது நம் மீது மட்டற்ற இரக்கம் கொள்கிறார். அவர் நமக்கு ஏற்படும் இழப்புகள், வேதனைகளை அறிந்து அவ்வேளைகளில் உதவியும் ஆறுதலும் அளித்து நல் வாழ்வு அளிப்பார் என்ற நம்பிக்கையுடன் நாம் இருக்க வேண்டும்.




இயேசுவைப் பின்பற்றும் நாம், அழிவுகள் ஏற்படும் போது அதைக் கண்டு வேதனையில் அழிந்து விடாது. நாம் அவ்வாறான நிலைமைக்கு உள்ளானவர்களுக்கு உதவி செய்யும் நேசக்கரத்தை நீட்டவேண்டும். இவ்வாறு தொழிற்படுவதற்கு அரச நிறுவனங்களும், பல தனிப்பட்ட நிறுவனங்களும் உள்ளன. அவற்றுடன் தனிப்பட்டவர்களாகிய நாமும் ஒன்று சேர வேண்டும். இவர்களுக்கு நம்மால் இயன்ற உதவிகள் செய்வதோடு, அழிவுகளிலிருந்து காப்பாற்றுவதற்கும் நடவடிக்கைகள் எடுத்தல் நமது கடமையுமாகும்.



இயற்கை அழிவுகளிலிருந்து பாதுகாக்க அபாய அறிவிப்பு, சூழல் பாதுகாப்புத் திட்டங்கள், அழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களை ஆற்றுப்படுத்துதல், இயற்கை அனர்த்தம் பற்றி விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துதல் என்பவற்றின் மூலம் ஏற்படும் அழிவுகளைத் குறைக்கலாம்.

## ஆற்றுப் பணி மூலம் செய்ய கூடிய உதவிகள்





இலவச விநியோகத்திற்காக

போர் போன்ற செயற்கை அழிவுகளை தடுப்பதற்கு சமாதான வழிகளில் பிணக்குகளைத் தீர்த்து, நீதியான அமைதியான கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும்.



வளங்களை உரியமுறையில் கவனமாகப் பேணுவோம்.

சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்போம்.

அன்பு, சமாதானம், சகிப்புத்தன்மை என்பவற்றை வளர்த்துக் கொள்வோம்.



## நாம் கற்றுக்கொண்டவை

- மனுக்குல அழிவுகள் கடவுளின் விருப்பத்தினாலோ அல்லது கடவுளின் திட்டத்தினாலோ ஏற்படுவது இல்லை. அனர்த்தங்களினால் பாதிக்கப்படுவோர் பாவிகள் எனக்கூறமுடியாது.

- அனர்த்தங்களுக்கு உள்ளானவர்களுக்கு, இயேசு அவர்களுடன் இருக்கிறார் என்ற நம்பிக்கையூட்டும் செய்தியை முன்வைப்பதுடன், இயன்ற உதவிகள் செய்யவேண்டும்.

- அழிவுகளைக் குறைப்பதற்கும், இல்லாதொழிப்பதற்கும் மனுக்குலம் இறைபற்றுடன் வாழ்வதோடு, மனித மாண்புக்குரிய நடவடிக்கைகளைக் கையாள வேணடும்.

## செயற்பாடு

1 அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு குழுவாகஅல்லது தனிப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்தக் கூடிய செயற்பாடுகள் 3 தருக.

2 அழிவுகளைத் தடுப்பதற்கு நாம் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் சில தருக.

3 விவாதம் செய்க.
"அழிவுகளுக்குக் காரணம் இறைவனின் தண்டனையா அல்லது மனித



இலவச விநியோகத்திற்காக